## நிபந்தனைகள்

1. கீழ்க்குறிப்பிடும் மாதிரிவிண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரித்து விண்ணப்பத்தை பூரணப்படுத்தி மாவட்ட செயலாளர், மாவட்ட செயலாளர் காரியாலயம் அம்பாறை என்ற விலாசத்துக்கு 2018/12/20ம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். அல்லது மாவட்ட செயலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடவும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உரையின் இடதுபக்க மூலையில் "2019 ம் வருடத்திற்கான பொருட்கள் சேவைகள் வழங்குனர் பதிவு செய்தல்" எனக் குறிப்பிடல் வேண்டும்.

2. சகல விண்ணப்பதாரிகளும் பதிவு செய்ய உத்தேசித்துள்ள ஒவ்வொரு வகைக்காகவும், ரூபா 250 யையும் இரண்டிற்கு மேற்பட்ட அனைத்து வகைகளுக்காகவும், ரூபா 500 யை அம்பாறை மாவட்ட செயலாளர் என்ற பெயரில் அம்பாறை மாவட்ட செயலகத்தில் அல்லது அம்பாறை மாவட்ட செயலகப் பிரிவுக்குட்பட்ட பிரதேச செயலகத்தில் பற்றுச் சீட்டைபெற்றுக் கொள்ளவேண்டும். பதிவுக்காக செலுத்தப்பட்ட பணம் மீளத்தரப்படமாட்டாது.

3. பதிவு செய்ய விருப்பமுள்ள ஒவ்வொரு விடயத்துக்கும் வெவ்வேறு விண்ணப்பங்கள் அனுப்புவதோடு, சகல விண்ணப்பங்களையும் ஒரேதபால் உறையிலிட்டு அனுப்புதல் வேண்டும்.

4. வேலையின் கீழ் பதிவு செய்ய எதிர்பார்க்கும் கட்டட நிர்மாணத் தொழிலில் ஈடுபட்டிருந்தமைக்கான பயிற்சிகள், மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களில் பதிவு செய்யப்பட்டிருந்தமைக்கான சான்றிதழ்களின் பிரதிகளை முன்வைத்தல் வேண்டும். வழங்குனர் சேவைக்கான, நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.

5. இதற்காக விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது. விண்ணப்பதாரிகள் கீழ் குறிப்பிடப்பட்ட விபரங்களுடன் பொருந்தும் வகையில் விண்ணப்பத்தினை தயாரித்தல் வேண்டும்.

6. சாதாரணமாக பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களின் பட்டியலில் மாத்திரம் விலை கோரப்படுவதுடன், தகுதியுடைய வழங்குனர்கள் போதியளவு எண்ணிக்கையில் பதிவு செய்யப்படாத சந்தர்ப்பத்தில், பதிவு செய்யப்படாத வழங்குனர்களிடமிருந்து விலைமனுக்கோரி ஒப்பந்தங்களை வழங்கும் உரிமை மாவட்ட செயலாளருக்கு உண்டு.

7. மாவட்ட செயலாளர் திருப்தியுறும் வகையில் விலைமனுக்கள் முன்வைக்கவும், வழங்கப்பட்ட விலைக் கேற்ப வழங்க முடியாத வழங்குனர்களின் பெயர்களை எந்தவித அறிவித்தலுமின்றி பட்டியலிலிருந்து நீக்கப்படுவர். பதிவுக்காக அனுப்பப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளவோ நிராகரிக்கவோ மாவட்ட செயலாளருக்கு உரிமையுண்டு.

8. மேலும் அரச நிறுவனங்களிலும் அல்லது அரச சார்பான பலதரப்பட்ட கருத்திட்டங்களின் கீழ் உதாரணம் (திவிநெகும போன்ற செய்யப்படுகின்ற உற்பத்திகள் அல்லது சேவைகளை இதற்குப் புறம்பாகப் பெற்றுக் கொள்வதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

டீ.எல்.எம்.பண்டாரநயக்க,
மாவட்ட செயலாளர்,
மாவட்ட செயலகம்,
அம்பாறை

## அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு
## மாவட்ட செயலாளர் காரியாலயம்
## அம்பாறை

### 2019 ம் வருடத்திற்கான வழங்கள் சேவைகள் மற்றும் ஒப்பந்த வேலைகளுக்கான வழங்குனர் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

அம்பாறை மாவட்ட செயலாளர் காரியாலயம் மற்றும் மாவட்டத்தின் பிரதேச செயலாளர் காரியாலயங்களுக்கான வேலைகளும் வழங்கல்களும் பெற்றுக் கொள்ளும் பொருட்டு 2019ம் வருடத்துக்காக பதிவுசெய்து கொள்ள விரும்பும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், தேசியமுகவர்கள், வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படும்.

01 வேலைகள்/பொருட்கள்

வகை இல விபரம்

1. கட்டடங்கள் நிர்மணித்தலும் பழுது பார்த்தலும்.
2. பிரதான பாதைகள், தண்ணீர்க் கடவைகள் அமைத்தலும் பழுது பார்த்தலும்.
3. குளங்கள் கால்வாய்கள், விவசாயக் கிணறுகள் நிர்மாணித்தலும் பழுது பார்த்தலும்.
4. சகல உலோக இணைப்பு (வேல்டிங் வேலைகளும் அலுமினிய வேலைகளும் அலுமினிய கதவுகள்/யன்னல்கள் வழங்கள் மற்றும் பொருந்தும் வேலைகள் உட்பட )
5. கட்டட மின்சார தொகுப்புகளை புதுப்பித்தல்.
6. நீர்த்தாங்கிகளை பழுதுபார்தலும் புதுப்பித்தலும்.
7. தச்சு /மேசன் வேலைவழங்கல்.
8. வாயுமூல உபகரணங்கள பழுதுபார்த்தல்.(வாகன வாயுமூல உபகரணங்கள் குளிரூட்டி கட்டட வாயுமூல உபகரணங்கள்.)
9. வேறு (மின்சாரமும்,கம்பி இழுத்தலும் பழுது பார்த்தலும்.)

பொருட்கள் வழங்கள் எழுதுகருவிகள்

10. சகலவித காகிதாதிகள் மற்றும் எழுது பொருட்கள் காரியாலயத் தேவைகளும்.
11. கணனி எழுது பொருட்கள் (கணனி, காதிதங்கள், றிபன், டிஸ்கட்களும்.)

காரியாலய உபகரணங்கள்

12. சகலவிதமான காரியாலயங்களினதும் உத்தியோகத்தர் விடுதிகளினதும். சுற்றுலா விடுதிகளினதும், வீட்டு உபகரணங்கள்.(வானே, ப்லாஸ்டிக் பயிபர் வகை. )
13. இறப்பர் முத்திரை, திகதி முத்திரை சட்டங்கள் என்பனவும் அச்சிடல் வேலைகளும்.
14. கணனி இயந்திரங்கள் தட்டச்சுகள் றோனியோ இயந்திரங்கள் நிழற்பிரதி இயந்திரங்கள் கணனி அச்சிடல் இயந்திரங்கள் கணிப்பான்கள் மேற்படி இயந்திரங்களின் உதிரிப்பாகங்களும், வலைப்பின்னல் கட்டமைப்பு உதிரிப்பாகங்கள்
15. உலோகம்,மரம்,ப்லாஸ்டிக் போன்றவைகளாலான பெயர்ப்பலகைகள்

கட்டப் பொருட்கள்

16. சகலவித கட்டடப் பொருட்கள்.
17. நீர்க்குழாய்களும் நீர்வழங்கள் உபகரணங்களும்.
18. சகல வித மின்சார உபகரணங்கள்.
19. வாயுமூலக் குளிரூட்டி (எயார் கண்டிசன்) இயந்திரங்களும் உதிரிப்பாகங்களும்.)

வேறு

20. சீருடை, மழை அங்கி, தோற் பொருட்களும் குடை உடைகள் மற்றும் திரைச்சீலைகள்.
21. விளையாட்டு உபகரணங்கள் மற்றும் நலன்புரி உபகரணங்கள்.
22. கேட்டல்/பார்வை உபகரணங்கள் ( கமரா, ஒலிபெருக்கி உபகரணங்கள்)
23. வாசிகசாலை புத்தகங்கள், சஞ்சிகைகள், வாரவெளியீடுகள் மற்றும் வேறு வெளியீடுகள்.
24. சுகாதார பாதுகாப்பு உபகரணங்கள்
25. சமைத்த உணவுகள் மற்றும் தேநீர் போன்றவை வழங்கல்.
26. சங்கீத உபகரணங்கள்.
27. மனித உணவுகளுக்கான பதப்படுத்தப்பட்ட உணவுகள் வழங்கல்.
28. ஒலி பெருக்கி உபகரணங்களை கூலி அடிப்படையில் வழங்கல்.
29. காரியாலய அடையாள அட்டைகளை வழங்கல்.

சேவைகள்

காரியாலய உபகரணங்கள்

30. கணனி இயந்திரங்கள்,தட்டச்சுக்கள்,ரோணியோ இயந்திரங்கள்,நிழல் பிரதி இயந்திரங்கள் கணனி அச்சிடல் இயந்திரங்கள்,கணிப்பான்கள்,வலைப்பின்னல் கட்டமைப்பு போன்றன பழுதுபார்த்தலும் பராமரித்தலும்.
31. காரியாலய உபகரணங்கள் மற்றும் உருக்குத் தளபாடங்கள் பழுதுபார்த்தல்.

வாகனங்கள்

32. சகலவித வாகனங்களும் பழுதுபார்த்தல்.
33. வாகனங்கள் சேவைப்படுத்தல்.
34. வாகங்களில் குளிரூட்டப்படல் (எயார் கண்டிசன்) டிங்கரிங் செய்தல் நிறப்பூச்சு பூசுதல் மற்றும் மின்சாரத் தொகுப்புக்களை பழுதுபார்த்தல்.
35. சகலவித மோட்டார் வாகனங்களின் பிரத்தியோக உபகரணங்களும் பாகங்களும்.
36. டயர்,ரியூப்,பெட்ரி போன்றன.
37. ஏலய்மன்ட் பரிசீலனை செய்தல் மற்றும் வீல் பெலன்ஸ் செய்தல்.
38. பாரங்கூடிய வாகனங்களை வழங்கல். ( பெக்கோ இயந்திரம் கல்ரோல் கெட்டபிளர் )

<u>வேறு</u>

39. மின்சார உபகரணங்கள் பழுதுபார்த்தல்.
40. துணிகள் துவைத்தல்,சுத்தம் செய்தல் போன்றவை (சுற்றுலா விடுதிகள்)
41. சுத்தம், துப்பரவு, சம்பந்தமான சேவைகள்
42. பாதுகாப்பு சேவைகள் வழங்கல்.
43. அச்சிடல் மற்றும் புத்தகங்கள் கட்டும் வேலைகள்.

# வழங்குனர்களை பதிவு செய்வதற்கான மாதிரி விண்ணப்பம் - 2019

1. வியாபாரத்தின் பெயர் :
2. முகவரி :
3. தொலைபேசி இல :
4. பெக்ஸ் இல :
5. ஈமெயில் இல :
6. வியாபாரத்தின் பதிவு இல :
7. பதிவு செய்ய விரும்பும் வேலைகள்/ சேவைகள்

| வகை இல | பொருட்கள் / சேவைகள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

8. கடன் வசதிகள் வழங்கும் கால எல்லை :
9. வெற் ( VAT) செய்யப்பட்டிருப்பின் இல :

எனது/எங்கள் மூலம் மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் சரியென உறுதிப்படுத்துவதுடன், அம்பாரை மாவட்ட செயலாளரால் தெரிவிக்கப்பட்ட வழங்குனர் நிபந்தனைகளுக்கு இணங்க பொருட்கள்/சேவைகள் வழங்குவதற்கு முடியும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

விண்ணப்பதாரியின் ஒப்பம் :

பெயர் :

திகதி :